மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி.

**OS No. 167 /2024**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr –III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : கண்ணன் (வா.சா.1 )<br>க/பெ.<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

**07.08.2026.**

**1 முதல் 6, 9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தாவான இராமசாமிதேவருக்கு பாத்தியப்பட்டது. எனது தாத்தாவுக்கு மேற்படி சொத்து அவரின் பூர்வீக சொத்தா அல்லது கிரைய சொத்தா என்றால் அது அவரின் பூர்வீக சொத்து ஆகும். எனது தாத்தா இராமசாமிதேவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் மொத்தம் மூன்று குழந்தைகள், 1. பெருமாள் தேவர், 2.இராமசாமிதேவர், 3.ராமசந்திரதேவர். நான் தாக்கல் செய்த பிராதில் இராமசாமிதேவருக்கு 2 குழந்தைகள் (இராமசாமிதேவர், ராமசந்திரதேவர்) என்று தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அவர் தனது பங்கை தனியாக பிரித்து கொண்டு சென்றுவிட்டார். நான் இந்த வழக்கில் எனது தாத்தாவின் அனைத்து குழந்தைகளையும் சொல்லததால் எனது வழக்கு சங்கதிகளை வேண்டும் என்றே மறைத்து (Supression of material facts) பாவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இராமசாமிதேவருக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது அம்மாவின் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். நான்

வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கின்றேன் என்றும், இராமசாமிதேவரின் பூர்வீக சொத்து என்று கூறிவிட்டு எனது அம்மாவின் பெயரில் உள்ள பட்டாவை மட்டும் தாக்கல் செய்வது நீதிமன்றத்தை ஏமாற்றும் சங்கதி என்றால் சரியல்ல. நான் எனது தாத்தாவான இராமசாமிதேவரின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது தாத்தாவான இராமசாமிதேவரின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எனது தாத்தாவான இராமசாமிதேவரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை தாக்கல் செய்யாத காரணத்தினால் எனது வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனது தந்தை இராமசாமிதேவரின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது அப்பா நான் பிறக்கும் முன்னரே இறந்து விட்டார். எனது தந்தை இராமசாமிதேவரின் வாரிசுகள் நாங்கள் தான் என்று வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ன் அடமானம் பத்திரம் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் எனது தாயாரான அம்மாகண்ணு முத்து அம்பளம் என்பவருக்கு எழுதி கொடுத்துள்ளார். எனது தாயாரான அம்மாகண்ணு முத்து அம்பளம் என்பவருக்கு எழுதிகொடுத்த அடைமானத்தை இன்று வரை நாங்கள் மீட்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் அடமானத்தை மீட்காத காரணத்தினால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்ய அருகதை இல்லை என்றும் முத்துஅம்பளம் தான் வழக்கு தாக்கல் செய்ய இயலும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் நாங்கள் மேற்படி அடமானம் வைத்த பணத்திற்கு வட்டி கட்டி வருகிறோம் என்று ஒரு பதிவு செய்யப்படாத ஆவணம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு சட்டத்தின் படி பதிவு செய்யப்படாததால் மேற்படி ஆவணத்தை நாங்கள் தயார் செய்து வழக்கிற்காக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது தாயார் அம்மாகண்ணு என்பவருக்கு சர்வே எண்.109/30A ல்

மட்டும் தான் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பிராதுவில் காட்டியுள்ள மற்ற இரண்டு சர்வே எண்களான 108/3, 108/5 ஆகிய சொத்துக்களுக்கு பட்டா எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தைக்கும் தாயாருக்கும் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை குழந்தைகள் என்றால் மொத்தம் 3 குழந்தைகள், 1. சேதுஅம்மாள், 2. வள்ளி, 3.கண்ணன் ஆகியோர்கள். சேது அம்மாளை நாங்கள் ஏன் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர் சொத்து வேண்டாம் என்று கூறிவிட்டார். சேது அம்மாளின் கணவர் பெயர் நடராஜான் ஆகும். அவர் தற்போது இறந்துவிட்டார். நான் தாக்கல் செய்த பிராதில் எனது அக்காவின் பெயர் சேது அம்மாள் என்று உள்ளது, ஆனால் இறப்பு சான்றிதழில் சேதம்மாள் என்று உள்ளது என்றால், அது பிழையாக இருக்க கூடும். சேது அம்மாளின் வாரிசுதார்களை சேர்க்காமல் நாங்கள் வழக்கு தாக்கல் செய்தது நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண்கள் 108/3, 108/5 அடங்கிய சொத்துகள் அரசாங்க பதிவேட்டில் அரசு புறம்போக்கு மயானம் என்று தான் உள்ளது என்றால், அரசாங்கம் மயானத்திற்கு வேறு ஒரு இடம் கொடுத்துள்ளது, தற்போது நான் மேற்படி இடத்தில் விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி 108/3, 108/5 ஆகிய சொத்துக்கள் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக, நாங்கள் தான் விவசாயம் செய்து வருகிறோம் என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதும், நான் அளித்துள்ள சாட்சியமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.